1981 எப்ரல் 16]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 மாதம் என்பதே அதை ஒரு லிமிட்டுக் காகச் சொல்லியிருக்கிறேன். அதற்கு முன்பாகவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களுடைய எண்ணத்தி னுடைய அடிப்படையிலே வெகு விரைவில் அதை முடிக்க நான் முயற்சி எடுத்துக்கொள்வேன்.

சேலம் அரிசிப்பாளையத்தில் பதுக்கி வைக்கப்
பெற்றிருந்த மருந்துப் பொருட்கள்.

*வினா எண். 763 திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் அரிசிப்பாளையத்தில் பதுக்கி வைக்கப்பட்டு இருந்த ரூ. 1 இலட்சம் பெறுமான மருந்துப் பொருள்கள் அண்மை யில் காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில் மேற்படி பதுக்கல்காரர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) சுமார் ரூ 4,200 மதிப்புள்ளமருந்துப்பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

(ஆ) சேலம் மாவட்டம் பள்ளப்பட்டி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

[முற்பகல் 9.20]

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் பள்ளப்பட்டி காவல் நிலையத்தில் சம்பந்தப் பட்டவர்கள் மீது வழக்குத் தொடர்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். மருந்துகள் பதுக்கி வைக்கப்படு வதால், அரிய மருந்துகள் கிடைக்காமல் போய் பல உயிர் இழப்பு கள் ஏற்படுகின்றன. ஆகவே, இப்படிப்பட்ட மருந்துகளைப் பதுக்கி வைப்பவர்கள் டாக்டர்களாக இருந்தால் அவர்கள் பட்டத்தை வாபஸ் வாங்கவும், மருந்து வியாபாரிகளாக இருந் தால் அவர்களுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும், லைசென்சுகளை ரத்து செய்யவும், அப்படிப்பட்ட தேசத் துரோகிகளை நாடுகடத்தவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே; பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனையில் பணியாற்றுகின்ற பணி யாளர்கள் இரண்டு பேர் திரு. மோகன், திரு. தியாகராசன்

இதில் ஈடுபட்டு இருந்தனர். அவர்கள் இருவரிடையேயும் ஏற்பட்ட சண்டையின் விளைவாக திரு. மோகன் என்பவர் திரு. தியாகராசன் என்பவர் மீது குற்றச்சாட்டுக் கூறியதன் அடிப் படையில், டி. எம். ஒ. அவர்கள் உடனடியாகத் தலையிட்டு, இரண்டு பேர் மீதும் நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். எப்படிப்பட்டவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப் படும் என்பதை நான் மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல அரிய மருந்துகள் பதுக்கப்படுவதால், பல உயிர் இழப்புகள் ஏற்படுவதோடுமட்டுமல்லாமல், மருந்துகள் தேங்கி விடுவதால், எக்ஸ்பயரி ஆகிவிடுகின்றன. இப்படி எக்ஸ்பயரி ஆகிவிடுகிற மருந்துகளும் விற்பனைக்கு வருகின்ற காரணத் தால். அடிக்கடி டாக்டர்கள் வீட்டிற்கு—கோர்ட்டுக்குச் செல்வது போல்—ஓயாமல் செல்லவேண்டியிருக்கிறது ஆகவே, இப்படிப் பட்ட எக்ஸ்பயரி ஆன மருந்துகளை கடைகளிலோ அல்லது டாக்டர்களோ கொடுக்காமல் இருப்பதற்கு அல்லது தடை செய் வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக்கேள்விக்குத் தொடர்பு இல்லையென்றா லும், எஸ்பயரி ஆகிவிட்ட மருந்துகளை மக்களுக்கு வினியோகிக் கப்படாமல் இருப்பதற்கு கடுமையான நடவடிக்கைகள் டிரக் டைரக்டரேட் மூலமாக எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, சேலம் அரிசிப் பாளையத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு லட்சம் பெருமான மருந்துப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அதில் சுமார் 4200 ரூபாய் மதிப்புள்ள மருந்துப்பொருள்கள் கைப்பற்றப்பட்டன என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த மருந்துகள் எங்கெங்கேயிருந்து கொண்டு வரப்பட்டன என்பது கண்டறியப்பட்டுள்ளதா? அப்படி செய்த அரசு அலுவலாளர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது? இதுவரையிலும் அது பற்றிய முழு விவரத்தையும் அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இவைகள் திரு. தியாகராசன் என்பவர் வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டன. ட்ரக்ஸ், காட்டன் ரோல்ஸ், பேன்டேஜ் கிளாத் ஆகியவை திரு. தியாகராஜன் வீட்டில்இருந்து கைப்பற்றப்பட்டன. அதன் மேல் இருந்த லேபில்கள் மூலமாக மருத்துவமனையில் இருந்து அவைகள் கைப்பற்றப்பட்டன என்று தெரியவந்தது. ஏறத்தாழ 6 மாதங்களாக படிப்படியாகஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சமாக அந்த மருந்துகள் எடுத்துச்

1981 ஏப்ரல் 16]

செல்லப்பட்டு, அவருடைய வீட்டில் அது சேகரித்து வைக்கப்பட்டு இருந்து இருக்கிறது. அவர் வீட்டில் இருந்த எல்லாவற்றையும் கைப்பற்றி இருக்கிறோம். அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. செம்மலை: பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற மருந்துகள் களவாடப்படுவது சேலத்தில் மட்டுமல்லாமல் சென்னை போன்ற இடங்களில் உள்ள பெரிய மருந்துவமனைகளி லும் களவு செய்யப்படுகின்றன என்கிற செய்தி வந்திருக்கிறது. பெரிய மருத்துவமனைகளில் குறைந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செக்யூரிட்டி போர்ஸ் இருப்பதால் தான் இத்தகைய நிலைமைகள் உள்ளன என்று சொல்லப்படுகிறது. எனவே, மருத்துவமனை களில் மருந்துகள் களவாடுவதைத் தடுப்பதற்காக இது போன்ற பெரிய மருத்துவமனைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகப் படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, பல்லாண்டுகாலமாக இப்படி மருந்துகள் மருத்துவமனையில் இருந்து களவாடப்பட்டுக்கொண்டும், அவ்வப்போது அவைகள் கண்டுபிடிக்கப்பட்டும் வருகின்றன. அவற்றை இப்போது படிப் படியாகக் கண்டுபிடித்துக்கொண்டு வருகிறோம். இப்போதுகூட இப்படி களவாடப்பட்டவைகளைக் கண்டுபிடிக்கக் காரணம் அந்த இலாகா அலுவலர்களைக் கூப்பிட்டுச் சொல்லியிருக்கிறோம் கடுமையான முறையில் இப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும், ஒவ்வொரு டிப்பார்ட்மென்டிலும் சரியான முறையில் கண்காணிப்பு இருக்க வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறோம். டீன் கான்பரன்ஸ், டி. எம். ஓ கான்பரன்ஸ் ஆகியவைகள் நடக்கின்றபோது நேரடியாக இது குறித்து அறிவுறுத் தப்பட்டு, யாரும் மருந்துகள் திருடிக்கொண்டு போக முடியாத அளவிற்குக் கடுமையான முறையில் கண்காணிப்பு நடவடிக்கை இருக்கவேண்டும் என்றும், அதற்காக சில செக்யூரிட்டி மெஷர்ஸ்ஸும் எடுத்து இருக்கிறோம். அவைகள் என்ன என்பதை இங்கே தெரிவிப்பது உகந்தது அல்ல என்பதையும் கூறிக்கொள் கிறேன்.

'நித்ய கல்யாணி' மூலிகை ஏற்றுமதி.

*வினா எண். 764—திரு. வேடசந்தூர் வி. பி பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் இருந்து ''நித்ய கல்யாணி'' மூலிகை ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அந்த ஏற்றுமதி தனியார்களால்செய்யப்படு கிறதா? அரசு மூலமே செய்யப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) தனியார்களால் செய்யப்படுகிறது. அரசு மூலம்செய்யப் படவில்லை.